**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 581 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 13** |
| **Name** | : | திருமதி. செந்தில்குமாரி |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.08.2024**

எதிரிகள் 1,2 ஆஜர். எதிரிகள் 3 முதல் 6 வரை ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருச்சி மாவட்டம் டாஸ்மாக் நிறுவனத்தில் முதுநிலை மண்டல மேலாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2017 ம் ஆண்டு நான் மதுரை மாவட்ட வருவாய் கோட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். 05.02.2017 ம் தேதி சிவப்பிரியா என்பவர் இறந்தது தொடர்பாக நாகமலை புதுக்கோட்டை காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை எண். 89/2017 நாள் 04.02.2017 ஆனது, 05.02.2017 அன்று மதியம் 01.00 மணிக்கு கிடைக்கப் பெற்று எனது விசாரணையை மேற்கொண்டேன். இறந்த சிவப்பிரியா என்பவரின் அம்மா பாக்கியலெட்சுமி என்பவர் தனது மகள் வரதட்சணை கொடுமையால் இறந்துவிட்டதாக புகார் அளித்திருந்தன் அடிப்படையில் நேரில் சென்று

விசாரணை மேற்கொண்ட போது, சிவப்பிரியா என்பவர் முதல் நாளில் சுடுகாட்டில் எரிக்கப்பட்டிருந்தார். அதனால் நான் அவரது பிரேதத்தைப் பார்க்க இயலவில்லை. பஞ்சாயத்தார்கள் மற்றும் சிவப்பிரியாவின் கணவர் மற்றும் அவரது பெற்றோர்களிடம் நான் விசாரணை மேற்கொண்டேன். இறந்த சிவப்பிரியாவின் கணவர் விருமாண்டி என்பவர் தனது மனைவி, தன்னிடம் ஏற்பட்ட சிறு மனஸ்தாபத்தின் காரணமாக தூக்கிட்டு இறந்துவிட்டதாகத் தெரிவித்தார். விருமாண்டியின் அப்பா கண்ணன் மற்றும் அம்மா பசும்பொன் ஆகியோர், தனது மகன் சொன்ன கருத்தையே தெரிவித்தனர். பஞ்சாயத்தார்களான சிவப்பிரியாவின் பெரியப்பா மகன் ஜெயபிரகாஷ் என்பவர், தனது மாமா பையன் விருமாண்டி என்பவர் , 04.02.2017 அன்று காலை, தனது மனைவி தன்னிடம் போனில், அவரது அம்மாவிடம் நகையைக் கொடுத்துவிடுங்கள் என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டதாகவும் அதனால் நீங்கள் நேரில் சென்று பாருங்கள் என்று சொன்னதாக, போனில் தகவல் தெரிவித்ததன் அடிப்படையில், மேற்படி ஜெபிரகாஷ் விருமாண்டியின் வீட்டிற்குச் சென்று பார்த்த போது, வீடு பூட்டி இருந்தது என்றும் கதவைத் தட்டிய போது, வருகிறேன் அண்ணா என்று சொன்னார் என்றும் வெகு நேரம் வராததால், ஜெயபிரகாஷிம், விருமாண்டியின் அண்ணன் காசிமூர்த்தி என்பவரும் கதவை உடைத்து பார்த்த போது, சிவப்பிரியா தூக்கிட்டுக் கொண்டார் என்றும் அவர்கள் விருமாண்டிக்குத் தகவல் தெரிவித்து வரவைத்தார்கள் என்றும் பக்கத்தில் உள்ள ஆஸ்பத்ரிக்கு சிவப்பிரியாவைக் கூட்டிச் சென்றபோது அவர் இறந்துவிட்டதாகச் சொன்னார்கள் என்றும் எனது விசாரணையில் ஜெயபிரகாஷ் கூறினார். சிவப்பிரியாவின் தாயார் பாக்கியலெட்சுமி, சிவப்பிரியாவின் தம்பி அருண்பாண்டி இருவரும் இறந்த சிவப்பிரியா,

வரதட்சணை கொடுமையால் தான் இறந்ததாக எனது விசாரணையின் போது தெரிவித்தார்கள். பஞ்சாயத்தார்கள் K.பொன்னாண்டி, K.சாந்திபூசன், C.பால்பாண்டி, K.காசி ஆகியோரும் சிவப்பிரியாவின் இறப்பிற்கு வரதட்சணை கொடுமை காரணம் இல்லை என்று எனது விசாரணையின் போது தெரிவித்தனர். எனது முதல் நிலை அறிக்கையை 05.02.2017 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு சமர்ப்பித்தேன். **பஞ்சாயத்தார்கள் வாக்குமூலங்கள் அதசாஆ.5, எனது முதல்நிலை அறிக்கை அதசாஆ.6 ஆகும்.** காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

பொதுவாக, சந்தேக மரணம் ஏற்பட்டால், குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 174ன் படி பிரேத விசாரணையை நான் மேற்கொள்ள வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் எந்த பிரேதத்தையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கையை 05.02.2017ம் தேதி பெறும் வரை எனக்கு வேறு எந்த source மூலமாகவும் தகவல் கிடைக்கப் பெற்றதா என்றால் 04.02.2017ம் தேதியன்று மாலை கிராமநிர்வாக அலுவலர் மூலமாக தகவல் கிடைக்கப் பெற்றது. நான் நேரில் சென்று பார்த்த போது, சுடுகாட்டியில் பிணம் எரியூட்டப்பட்டிருந்தது. அந்த எரியூட்டப்பட்டிருந்த சடலம், பெண் சடலமா ஆண் சடலமா என்று எனக்குத் தெரியாது. பொதுவாக, கிராம நிர்வாக அதிகாரி, ஒரு குற்றம் சம்பந்தப்பட்ட தகவலை எனக்குச் சொல்லும் போது, உயர் அதிகாரிக்கு எழுத்து பூர்வமாகத்தான் தகவல் தர வேண்டும் என்றால் சரிதான். எனக்கு கிராம நிர்வாக அதிகாரிகளுக்கான கையேடு (manual) இருப்பது பற்றி எனக்குத்

தெரியும். அந்த கையேட்டின் படி, குற்ற சம்பவம் பற்றி தகவல் கிடைக்கப் பெற்றால், எழுத்து பூர்வமாக படிவத்தில் 3 பிரதிகள் எடுத்து, அதில் ஒன்றை மேலதிகாரிக்கும், ஒன்றை காவல் துறைக்கும் அனுப்பி வைப்பதும், ஒன்றை தனது கோப்பிற்கும் வைப்பதும் உண்டு என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் எனக்கு முதல் நாள் எத்தனை மணிக்கு தகவல் தெரிவித்தார் என்பது குறித்து எங்கள் அலுவலகத்தில் எந்த பதிவேட்டிலும் பதிவு உள்ளதா என்றால் இல்லை. நான் எத்தனை மணிக்கு தகவல் கிடைத்து, சம்பவ இடத்திற்குச் சென்றேன் என்றால் மாலை நேரம் இருக்கும். நேரம் மாலை சுமார் 05.00 அல்லது 06.00 மணி இருக்கும். அங்கு உள்ளூர் மக்கள் யாரும் கூடியிருந்தார்களா என்று ஞாபகம் இல்லை. நான் சடலத்தை மயாணத்திற்குச் சென்று தான் பார்த்தேன். நான் சென்ற மயாணம் என்பது அந்த ஊரில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று ஞாபகம் இல்லை. அந்த மயாணத்திற்குச் செல்வதற்கு அந்த ஊரைக் கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். மயாணத்திற்குப் போகும் போதோ, அல்லது மயாணத்தில் இருந்து எனது அலுவலகத்திற்குச் செல்லும் போதோ எரியூட்டடப்பட்டது ஆண் சடலமா அல்லது பெண் சடலமா என்றும், அதை எரியூட்டியது யார் என்றும் கேட்டுத் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். ஆனால் அதை அறிக்கையில் குறிப்பிடவில்லை. முதல் தகவல் அறிக்கை இதச பிரிவு 201 ன் படியும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரிவு 201 இதச என்பது, தடயங்களை அழிப்பது அல்லது மறைப்பது என்பதற்கானது என்றால் சரிதான். அதனால், எனது விசாரணையின் நோக்கமே, அவ்வாறு தடயங்களை அழித்தது யார் என்று தெரிந்து கொள்வது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் போது, நான்

அவ்வாறு விசாரணை செய்து தெரிந்து கொண்டிருந்தால் அது பற்றி எனது அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பேன் என்றும் நான் சொன்னது போல் அவ்வாறு விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதசாஆ.6 ல், நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, நான்குபேர் ஆட்டோவில் கூட்டிச் சென்றுவிட்டதாக குறிப்பிட்டுள்ளதில் அந்த 4 நபர்களின் பெயர்கள் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் மயாணத்திற்குச் சென்றபோது, அங்கு இருந்த நபர்கள் யார் யார் என்று விசாரித்து அவர்கள் பெயரினைக் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது அறிக்கையில், இந்த வழக்கில் வரதட்சணை கொடுமையால் மரணம் ஏற்படவில்லை என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை